## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.6.5.B

எண்ணியல் - பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு பயிற்சி 1.5 - 6-10

## எண்ணியல் - பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு பயிற்சி 1.5 - 6-10

6. மதிப்பு காண்க.

i) $26.13 \times 4.6$

```
      2 6 . 1 3
  ×         4 . 6
    1 5 6 7 8
1 0 4 5 2
1 2 0 . 1 9 8
```

$26.13 \times 4.6 = \boxed{120.198}$

ii) 3.628 + 31.73 - 2.1

$3.628 + 31.73 - 2.1 = {}^{①}\ 3.628 + 31.73 - 2.1$

$= {}^{②}\ 35.358 - 2.1$

$= 33.258$

① 3.628 (+)31.730 = 35.358

② 35.358 (-) 2.100 = 33.258

$3.628 + 31.73 - 2.1 = \boxed{33.258}$

7. முருகன் சில பைகளில் காய்கறிகளை வாங்கினார். ஒவ்வொரு பையும் 20.55 கி.கி எடையுடையது. அனைத்துப் பைகளின் மொத்த எடை 308.25 கி.கி எனில், எத்தனை பைகளை வாங்க வேண்டும்?

முருகன் வாங்கிய ஒரு காய்கறி பையின் எடை = 20.55 கி.கி

முருகன் வாங்கிய காய்கறி பைகளின் மொத்த எடை = 308.25 கி.கி

∴ முருகன் வாங்க வேண்டிய பைகளின் எண்ணிக்கை $= \frac{308.25}{20.55} = \frac{308.25 \times 10^2}{20.55 \times 10^2}$

$= \frac{308.25 \times 100}{20.55 \times 100} = \frac{30825}{2055} = 15$

```
         15
2055 ) 30825
       2055
       10275
       10275
           0
```

∴ முருகன் 20.55 கி.கி எடையுள்ள $\boxed{15}$ காய்கறி பைகளை வாங்க வேண்டும்.

8. ஒருவர் வட்ட வடிவப் பூங்காவில் நடைப் பயிற்சி செய்யும் தூரம் 23.761 மீ எனில், 100 வட்டமடித்தால் அவர் கடந்த தொலைவானது எவ்வளவு? (கிலோ மீட்டராக மாற்றுக.)

வட்ட வடிவப் பூங்காவில் அவர் நடைப் பயிற்சி செய்யும் தூரம் = 23.761 மீ

∴ அவர் 100 வட்டமடித்தால் அவர் கடக்கும் தொலைவு = $23.761 \times 100$ = 2376.1 மீ

2376.1 மீ ஐக் கி.மீ - ஆக மாற்ற 1000 - ஆல் வகுக்க வேண்டும்.

2376.1 மீ $= \frac{2376.1}{1000} = \frac{2376.1}{1000}$ = 2.3761 கி.மீ

∴ 100 வட்டமடித்தால் அவர் கடக்கும் தொலைவு $\boxed{2.3761}$ கி.மீ ஆகும்.

9. 0.002 விட 0.0543 எவ்வளவு பெரியது?

கண்டுபிடிக்க வேண்டிய எண்ணை $x$ எனக் கொள்க.

$0.0543 - x = 0.002$

$-x = 0.002 - 0.0543$

(-1) ஆல் இருபுறமும் பெருக்க

$x = -0.002 + 0.0543 = 0.0523$

0.0543 (-)0.0020 = 0.0523

∴ 0.002 - ஐ விட 0.0543 ஆனது $\boxed{0.0523}$ பெரியது.

10. ஒரு அச்சு எந்திரமானது ஒரு நிமிடத்தில் 15 பக்கங்களை அச்சிடுகிறது எனில், 4.6 நிமிடங்களில் அது எத்தனை பக்கங்களை அச்சிடும்?

அச்சு எந்திரம் ஒரு நிமிடத்தில் அச்சிடும் பக்கங்களின் எண்ணிக்கை = 15

∴ 4.6 நிமிடங்களில் அச்சிடும் பக்கங்களின் எண்ணிக்கை = $4.6 \times 15 = 69$

```
      4 . 6
  ×     1 5
    2 3 0
    4 6
    6 9 . 0
```

∴ அச்சு எந்திரம் 4.6 நிமிடங்களில் $\boxed{69}$ பக்கங்களை அச்சிடும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/6a9sRYE41EM


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 31st October, 2022 :: 06:39 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.